ஸ்ரீ பால்

# தெண்டாயுதபாணி



## K. A. மதுரை முதலியார்

ஷண்முகானந்த புத்தகசாலை,

விலை) பார்க்டவுன், சென்னை-3 (15 ந.பை.

தஞ்சை வடக்கு வாயல்

# ஸ்ரீ பால

# தெண்டாயுதபாணி

## ஆசிரிய விருத்தம்

### கணபதி துதி

சீர்பெற்ற மூஷிகவாகனம் பதினில், ஏறிவந்தேன் முன்னே சிங்கார ஜோதியின்ன, பார்வதியும் பரமனும் முருகனோடு வானவர் ரிஷி முனிவர் சித்தரினங் கார்மேக வண்ணனும் கஞ்சனும் ஜயஜயா கணபதி துணை யென்னவும், பேர்பெற்ற தேவாயென் சிந்தையில் விளையாடும் சுந்தர கணேச குருவே.

வாழ்கின்ற தஞ்சைநகர் வாழையடி வாழையாய் வாழ்ந்திடும் வடக்குவாயல், வரிசையாய் கடைகளும் வண்டிகள் இருப்பிடம் வர்ணநதி போகும்சாலை, வணங்கினேன் கரிமுகனை வாழ்ந்திடும் ஆஞ்சநேயா வரிசையாய் யானும் கண்டேன், வாலப்பிருயமும் எதிரிட்ட பார்வையும் வள்ளி தெய்வயானை கண்டேன், வர்ண மயிலேறியே வடிவேல் பிடித்துமே வரமது தரவுங் கண்டேன், வெள்ளிமலை யோகனே பழனிமலை வாசனே வாழ்கின்ற வாலை மகனே, உண்மையுடன் அடியேன் நினைத்த வரம் தருவாய் வள்ளிதெய்வானையுடனே, வாலவய தாயுனது வளர் தஞ்சை பதிவாழும் பால தெண்டாயுதபாணி போற்றி.

மந்திரம் செய்பவர்கள் உன்னை நினையாவிட்டால் மாரண செய்பவனும் நீ, தந்திரம் செய்பவர்கள் உன்னை நினையாவிட்டால் தாரணம் செய்பவனும் நீ, ஓம் சரஹண பவா என்று அட்சரம் அடக்கையில் உயிரெழுத்தானவனும் நீ. ஒன்பது சக்கரம் ஐம்பத்தோர் அட்சரத்தில் உயிரெழுத்தானவனும் நீ மயான ருத்திரன் மாமுண்டி ருயனையு மரித்து அடிப்பவனும் நீ, மலையாள பகவதியும் 'தகதகவென வருகையில் மாயமாய் கொல்பவனும் நீ. பாலன் வருந்துகிறேன் ஓலமிட்

டழுகிறேன் பதறியே வேலெடுத்து, பளபளென மயிலேறி வள்ளிதெய்வானையுடன் வருகுவாய் பாலதெண்டாயுதபாணி போற்றி.

தாயில்லை தந்தையும் தமயனுமில்லையே தற்கார்க்கவொரு வரில்லை, தைரியம் சொல்லவும மனிதருமில்லையே தணிகா சலக் கடவுளே. மாமனும் மாமியும் மைத்துனரில்லையே மாளாத வுறவுமில்லை, உற்றாரும் பெற்றாரும் உறமுறையவ ரில்லையே ஒரு பயன னடைந்ததில்லை. அண்டவு நிழலில்லை ஒண்டவும் இடமில்லை அப்பனே கந்தவேலா, சண்டனும் வந்திப்போ கண்டனே செய்குருன் சண்முகா உனக்கபயம். பாலன் வருந்துகிறேன் ஓலமிட்டழுகிறேன் பதறியே வேலெ டுத்து, பளபளென மயிலேறி வள்ளி தெய்வானையுடன் வரு குவாய் பாலதெண்டாயுதபாணி போற்றி.

வேலாயுதம் வொருகை சூலாயுதம் வொருகை விரிச்சந்திர பாணம் வொருகை, வெற்றிவேல் மகாமந்திர வாளொருகை வீரகன் னாலாயிரம் பெறுக, சூரியப் பிரகாசமாய் சுந்தரமா கவே சுத்தவொளி முகங்கள் ஆறும்,நவரெத்ன மாலையும் கவசகுண்டலமுடன் நற்சிங்கார ரூபமும், சூலாயுதம்பெறுக செயரூபமாய் வந்த சோமசுந்தரப் பொருளே, சூதாக சுனை யில் கிழவனாய் நின்றதொரு சிவசுப்பிரமணிய கடவுளே, பாலன் வருந்துகிறேன் ஓலமிட்டழுகிறேன் பதறியே வேலெடுத்து, பளபளென மயிலேறி வள்ளி தெய்வானையு டன் வருகுவாய் பால தெண்டாயுதபாணி போற்றி.

செந்திமாலை

சதாசிவத்தில் உதித்தெழுந்த ஜோதியாச்சு சங்கரனார் ஈன் றெடுத்த குழந்தையாச்சு, வீரமலை விருளிமலை வேலுமாச்சு வேதாந்தம் சித்தாந்தம் குடைகளாச்சு, மண்டலங்கள் நிறைந்திருக்கும் மயிலுமாச்சு மன்னர் சூழ்ந்திருக்கும் படை யுமாச்சு; காலனோடெதிர்த்து நிற்கும் கடம்பனுச்சு கந்தரி டம் அண்டியிருக்கும் இடும்பனுச்சு.

ஆறுமுக மானபொருள் நீர்தானுதும் அகண்டபரிபூரண மும் நீர்தானுகும், ஐம்பத்தோர் அக்ஷரமும் நீர்தானுகும் ஐந்

எழுத்தின் உயிரெழுத்து நீர்தானுகும், அசுரனை வென்றவனும் நீர்தானுகும் ஐந்தெழுத்தின் கழிமுனையில் நீர்தானுகும், வள்ளி தெய்வானையுடன் மயிலும்மேறி வரவேணும் தெண்டாயுதபாணி போற்றி.

ஓமென்ற சக்கரமும் நீர்தானுகும் ஓங்கார ரீங்கார நீர்தானுகும், சௌவென்ற அக்ஷரமும் நீர்தானுகும் சண்முகமாய் நின்றவனும் நீர்தானுகும், ஸிரியுமென்றே அக்ஷரமும் நீர்தானுகும், கிழவனாய் நின்றவரும் நீர்சானுகும்,வள்ளி தெய்வானையுடன் மயிலும்மேறி வரவேணும் தெண்டாயுதபாணி போற்றி.

அமணர்குலம் வேரறுத்த கையும் மெங்கே ஆறுமுகம் பன்னிருகை வேலுமெங்கே, தாணத்தில் ஓடிவரும் இடும்பனெங்கே உன் சந்நிதியில் யிருக்கின்ற கடம்பனெங்கே வேகமதாய் ஓடிவரு மயிலுமெங்கே விதமான சங்குமணி நாதமெங்கே. வள்ளி தெய்வானையுடன் மயிலும்மேறி வரவேணும் தெண்டாயுதபாணி போற்றி,

சிங்காரமாகவுன் சென்னிதனில் மகுடமும் செவியினில் குண்டலமும் மின்ன, சிலமுடனே உனது நெற்றியில் திலகமும் திருநீற்று காப்பு மின்ன, செங்கையில் வேலாயுதம் தங்கு ருத்திருக்ஷ கெண்டி ஜெபமாலை ஜோதிமின்ன, ஜெயவீர புஜமதிலே நயமான முத்துமணி திரண்டவடி வர்க்கமின்ன, மேனியில் ஆபரண அழகு முன் பாதரட்சையும் அசையு முன் மேனிமின்ன, ஆடியடியார்களுக்கனுகூலமாய் வந்து அருள்புரியும் வாக்குமின்ன, ஓங்கும் புகழ் தங்கவே தஞ்சையில் வாழ்ந்திடும் சிவசுப்பிரமணியக் கடவுளே

தட்டு சல்லடங் கச்சை பட்டு பீத்தாம்பரம் தலையில் முண்டாக வைத்து. தாளடியிலே சிலம்பாட சென்டாமணி ககதகனவே துலங்க. மட்டி லாபரணங்கள் பூட்டியே மார்பினில் மகர கெண்டிகை ஜொலிக்க, மாணிக்க தடியினிரு மலைகளை மாட்டியே மண்டியிட்டே நடக்க. அஷ்டகஜம் விரிட்டு தட்டுதமொறியே அலறியே நடுங்கி நடுங்கி யாட. யெட்டியடி வைத்துநீர் யேகிநடமாடிவரும் சிவசுப்பிரமணியக்கடவுளே.

## கதிர்காம ஆசிரிய விருத்தம்

ஆனைமுகவாயுமை அனுதினம் கம்பினோன் ஐங்கரனே ஓடி வருக, ஆறுமுகசுவாமியின் பேரில் கதைபாட அன்புடனே ஓடி வருக, சதுர்மறை பிர்மனும் அன்னவாகனமேறி சரஸ்வதியுடன் வருகவருக, பரமனும் பார்வதி ரிஷபவாகனமேறி பண்புடனே வருக வருக, சேஷசயனத்திற் ரெங்கரும் அலமேலு மங்கையும் சீக்கிரம் வருகவருக. தசரதர் புத்திரர் ஸ்ரீராமர் லக்ஷமணர் சீதையுடன் வருக வருக, கெருடவாகனமேறும் ருதா ருக்மணியுடன் கிருஷ்ணனும் வருக, சிங்கவாகனமேரும் சிங்களநாச்சி அம்மனும் க்ஷணத்தில் வருக வருக, புஷ்பச்சிவிகையின் மீதினில் விளங்கும் அம்பிலூர் மாரியும் அருகினில் வருக வருக, அக்கினிபாணத்தை அதரவே பொடி செய்யும் அன்னை காமாக்ஷி வருக வருக வருக, அஷ்டத்திக்கிலுள்ள துஷ்டர்களை அதம் செய்யும் அங்காள அம்மன் வருக வருக, முக்கத்து முக்கோடி தேவர்கள் முனிவர்கள் என் முன்னமே வருக வருக, நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் முனிவர்கள் நடனமெண்ணடி வருக வருக, எமதர்மராஜனும் எருதுமேலேறிய யென் முன்னே வருக வருக, ஆனைவாகன மேரும் ஐயனார் முனிவரும் ஆடியே வருக வருக, இத்தனை பேர்களும் இந்த வந்திருக்கையில் யேன் ஆறுமுகம் வரவேயில்லை; எங்கேயோ ஞாபகம் எவ்விடத்தில் சிந்தையோ யென்மேல் மனஸ்தாபமோதான் நாலைந்து வருஷமாய் நித்திரையில்லையே நாதனைப் பார்க்கவேண்டி, அன்னம் புசிக்கலை தண்ணீர் குடிக்கலை நற்சுகம் பெறவே யில்லை, வருகிறார் வருகிறார் வர்ணமயிலேறியே கந்தன் சங்கு நாதங்களும் யெங்கேயோ கேட்குதே சண்முகம் வருவதாக காலினில் வெண்டையும் கலகலண தண்டையும் கனகமணி சத்தத்தோடு, காவிபுரிந்து சடைகவச குண்டலமணிந்து காளமயிலேறி கந்தன். கடம்பனொருகாவடி இடும்பனொருகாவடி காணுதலெக்ஷம் கோடி கண்டவர்கள் பாடவும் கைகொட்டி ஆடவும் கந்தவேல் நின்றாடவும், கடம்பாவனத்தை அதம்செய்த ஐயனே கதிர்வேலெடுத்து நீரும்; கடகடன மயிலேறி வள்ளி தெய்வானையுடன் வருதுவாய் கதிர்காமவேல் முருகனே,

அடிபடுது அடிபடுது மௌத ளங்களும் ஆறுமுகன் வந்திருரென்றே இடிபடுது இடிபடுது மததளம் பேரிகை எமலோகம் கிடுகிடுங்க மயில் வருது மயில் வருது மன்னருட வாகனம் மண்டலம் கிடுகிடுங்க வேல் வருது வேல் வருது வீரகண்டாமணி விண்ணுலகம் நடுநடுங்க அதர்வெட்டு பீரங்கி அதிரியே விழுகுது அமரலோகம் கிடுகிடுங்க சிறு தாரை சங்குரகம் சத்தமும் பொழியுது சிவலோகம்நடுநடுங்க பிசாசுகள் பிணிகளும் போரென்றோடுது பீரங்கி சப்தம் கேட்டு வேதாளம் பேதாளம் பூதமும் ஓடுது வேட்டுவுட ஓசைகேட்டு சங்குநாதங்களும் எங்கேயோ கேட்கிறது சண்முகம் வருவதாக காலினின் வெண்டயம் கலகலன தண்டயம் கனகமணி சப்தத்தோடு காவியுடைதரித்து கவசகுண்டலமணிந்து கானமயிலேறி கந்தன் கடம்பனொரு காவடி இடும்பனொரு காவடி காணாத லெக்ஷங்கோடி கண்டவர்கள் பாடவும் கைகொட்டி யாடவும் கந்தவேல் நின்றாடவும் கடம்பாவனத்தை அதம்செய்த அய்யனே கதிர்வேலெடுத்து நீரும் கதருகிறேன் பதருகிறேன் ஓலமிட்டமுகிறேன் கந்தனே கண்திறந்து கடகடன மயிலேறி வள்ளி தெய்வானையுடன் வருகுவாய் கதிர்காம வேல்முருகனே.

ஈசன் மகிழ் பொதிகை முனிக்குருவுமாகி ஈராறுகை தனிலே வேலுமேந்தி பாசமுடன் மயிலேறி அசுரரை வென்று பன்பான அமரருட துயரம் தீர்த்து தேசிகனார் கதிர்காம வேலவர்மீதில் தீர்க்கமுள்ள பதினாறு கவிகான் சொல்ல மாசில்லாப் பரஞ்சோதி ஒற்றைக் கொம்பன் மலரடியை யனுதினமும் வணங்கினோமே.

---

## பழனி வேலவர் மீதில்

## பனிரெண்டுகைவேல் ஆசிரிய விருத்தம்.

சிரசுதனில் கிரீடமும் சிங்கார தோள்களும் சிறுமணிகள் கழுத்தினழகும், திருநீற்று நெற்றியும் சிறந்த பூணூல்களும் சிங்கார இடையினழகும், பன்னிருகையில் ஆயுதம் சொல்

லவே பால நான் ஓடிவந்தேன். வேலாயுதம் வொருகை சூலாயுதம் வொருகை விருச்சந்திர சாட்டை வொருகை கீதங்கள் பாடவே கின்கிணி வொருகை கேசவன் சங்கு வொருகை சமணரை வதைத்திட்ட சக்கரம் வொருகை சங்கரன் மாதும் வொருகை, மகமாயி பகவதி மகாதேவி பிடித்திட்ட மந்திரமும் வொருகை, வீராதி வீரரை வெல்லவே யொடித்திட்ட வேதாந்த வில்லும் வொருகை, அமணர் குலங்கருவை அருத்திட்ட ஆங்கார அம்பு வொருகை, மகா தேவருனும் கண்டு திடுக்கிடுவார் மந்திரவாளும் வொருகை. கணக்குடன் அட்சரம் ஜெபிக்கவே வந்திட்ட கண்ரகோடாலி வொருகை, கார்த்திடும் ஈராறு கரத்தினில் அணிந்து நீ காணமயிலேறி நின்று. பளபளென மயிலேறி வள்ளிதெய்வானையுடன் வருகுவாய் பழனிமலை வேல் முருகனே.

# மாலை

சீர்புகழும் யானைமுகன் செழித்து வாழ்க சிறப்புடனே திருமாலும் மங்கை வாழ்க. வார்குழலாள் தெய்வானைவள்ளி வாழ்க மணம் புணர்ந்த ஆறுமுகம் வடிவேல் வாழ்க, தார் புகழும் மேலமலை முருகா வாழ்க தமிழ் சொன்ன பிள்ளைகளும் தழைத்து வாழ்க, பார்புகழும் அன்னமொரு கோடிகளாகும் பாரமலை ஆண்டவரே பழனிவேலு.

மூர்க்கமுள்ள ஆறுமுக வடிவுமாகி முளைத்தெழுந்த சோதியைநான் காணவேண்டி, தீர்க்கமுள்ள மணிமார்பா அமரர்கோவே செங்கைவடி வேலவனே என்று சொன்னேன் வேண்டி. கார்க்கமன மிரங்கலையோ அய்யா சுவாமி கந்தனே என்மீதில் தயவு வைத்து, கார்க்கயினி வேணுமையா யேழை பங்கா பாரமலை யாண்டவனே பழனிவேலு.

குயிலதுபோல் கூவுகிறேன் வாய்திறந்து கொஞ்சும் நல்ல சடையாண்டி குழந்தைவேலு வெயில்கண்ட மெழுகதுபோல் உருகுகின்றேன் மேனியெங்கும் புண்ணாகி மெலிந்து வாடி மயில் நடன் மாடிவந்து யென்னைக்காரும் மலைமுருகா செந்தில் வடிவேலா என்னை பயிலது பண்ணாதே விடவுமாட்டேன் பாரமலை யாண்டவனே பழனிவேலு.

தேடினேன் சிங்காரவேலா உந்தன் திருமுகமும் பன்னி ரெண்டு கையும் வேலும் நாடினேன் மலைதோறும் சுற்றிவந் தேன் நற்கமல ஆறுமுக பாதம்காண ஆடினேன் ஆறுமுக வேலாவென்று ஆண்டவரும் ருத்ராட்சமாலைபூண்டு நாடி னேன் எனது கலி தீருமையா பாரமலையாண்டவனே பழனி வேலு.

கால்கொண்ட வீரமெல்லாம் சுற்றிவந்தே கதிர்வேல வென்றுமனம் கருத்திலெண்ணி வேல்கொண்டு மயிலேறி நடனமாடி விளையாடி வோடிவந்து முருகா வென்னை ஆட் கொண்டால் உனக்கு வெகு பாரமுண்டோ அடியேனால் ஆகாது பொறுக்கமாட்டேன் பால்கொண்டு அபிஷேகம் செய்வேனையா பொறுக்கமாட்டேன்பால் கொண்டு அபிஷே கம் செய்வேனையா பாரமலையாண்டவனே பழனிவேலு.

தங்கம்போல் ஒளிவான மேனியெங்கும் தளதளப்பாய் வெண்ணீரும் தரித்துக்கொண்டு அங்கமெங்கும் காவியினால் ஆடைகட்டி அழகான ருத்ராட்ச மாலைபூண்டு செங்காவி நிறமாக வருவார் எங்கள் தேசிகனார் திருவடியைசேர்வதற்கு தங்கம்போல் பாதமலர் பணிவேனையா பாரமலையாண்ட வனே பழனிவேலு.

வாழ்கின்ற தஞ்சைநகர் வடபாவிலே வட்டமதிலே வாழ் கின்ற அருணாஜலம் பிள்ளை கணபதியை முன்னிட்டு கவி தனை நாட்டிடும் கந்தவேல் பேரிலேதான் வித்தையும் ஜால மும் வேடிக்கை பார்க்கவும் வெகுபேர்கள் அறியவேணும் வேலவன்பேரிலே வேடிக்கையாகவே வெகு முறையாய் பாடி வைத்தார் தஞ்சைமாநகர்தனில் விஞ்சையுடன் வாழ் கின்ற தாமோதரன் பெற்றமகனே தகதகென மயிலேறி வள்ளி தெய்வானையுடன் தட்சணம் வருகுவாயே வாடுகி றேன் தேடுகிறேன் வண்மையுடன் வணங்குகிறேன் வடி வேலெடுத்து நீரும் வாலவயதாயுன வளரதஞ்சைபதி வாழும் பாலதெண்டாயுதபாணி போற்றி.

# பால தெண்டாயுதபாணி அமிர்தப்பத்து.

பொய்யுடலை மெய்யென்று நீயருடனுறவாகி மெய்யறிவிலாத பாவி, பொய்யான மடமாதரெனுமந்த பெயருடன் பொழுதினை கழித்தபாவி, கையார நின்கழல் பூசித்து பேரின்பக்காட்சி காணாதபாவி, கல்லாத புல்லரிடம் வல்லாண்மை பேசியே காலங்கழித்தபாவி, மெய்யான பேரின்ப நிஷ்டையின்னதென்றதன் மேன்மையறியாத பாவிநான், மெல்லியர்களான பாவி, யென்போலுமொரு பாவியிலை கொடிய பாவி, நீயவனென்று கைவிட்டிடாதே, யடிமை தீவினையகற்றி யாள்வாய், திங்களனி சங்கரன் மங்கையருள் செல்வமே, தென்பழனி பாலதெண்டாயுதபாணி போற்றி.

கைக்குள் வெண்ணையை வைத்து நெய்யெடுக்கறியாத கசடர்களையொத்தபாவி கல்நெஞ்ச வஞ்சமேகுடிகொண்டு சமுசார கவலையி லுழன்றபாவி, மையாடு தெய்வானைபாகனை நின்கழல் மனதி லூனாதபாவி, மாதருல்லாச வைபோகத்தழுந்தியே மதியையறியாத பாவி, மாபாவி யென்போலு மொரு பாவியாருமில்லை மண்ணுலகில் கொடியபாவி. திக்கெலாம் போற்றுமொரு தெய்வமே, உனையின்றி திக்குவேறில்லை யாள்வாய். திங்களனி சங்கரன் மங்கையருள் செல்வமே தென்பழனி பாலதெண்டாயுதபாணி போற்றி.

சர்க்கரைக் கற்கண்டு தேனுக்கு மினிது சன்மார்க்க மறியாதபாவி சன்மார்க்க மகிமையை யின்னதென் றறியாமல் சற்சனரை வதைத்தபாவி, துன்மார்க்க ருறவினாலென்மனம் போனபடி தொல்லுல குழன்பாவி, துலையாத சம்சார மலையெனும் பேயினால் துரியநிலை மறந்தபாவி, துணையெனக்காருமில்லை யாதரி யென்றவரை துரத்தியே யடித்தபாவி, தானுலகில் மாபாவி யென்போலு மொருபாவி யாருமிலை கொடியபாவி திக்கஷ்டகோண மொரு கோடியில் வலமாய் வந்த தெய்வமே யெனையாளுவாய் திங்களனி சங்கரன் மங்கையருள் செல்வமே தென்பழனி பாலதெண்டாயுதபாணி போற்றி.

ஸ்ரீனிவாசா அச்சகம், குளே, சென்னை-7.

# நம் நாட்டு வைத்தியம்

## இந்நூலை தொகுத்தவர், ஸ்ரீரங்கம் சித்தவைத்தியர்
## S வீரப்பெருமாள் பிள்ளை

நீங்கள் வைத்தியர் என பெயர் வாங்க விரும்புகிறீர்களா? அப்படியானால் இன்றே நம் நாட்டு வைத்தியத்தை வாங்கி படியுங்கள், நீங்கள் பிரபல வைத்தியராகத் திகழலாம் என்பது உண்மை.

இது ஓர் உன்னதப் படைப்பு இதுவரை காணாத சிறந்த கட்டுக்கோப்பான சித்த வைத்திய நூல் என்றால் இது மிகையில்லை இதில் ஆயுர்வேதம், யூனானி, அலோபதிக் முறைகளும் இடம் பெற்றுள்ளது. வைத்தியம் பயிற்சி பெற விரும்புவோர்களுக்கும், வைத்தியம் பயின்றுள்ள பிரபல வைத்தியர்களும், பொழுதைப் போக்க விரும்பும் அன்பர்களும் பயன் அடையும் விதத்தில் எழுதப்பட்டியிருக்கிறது.

நம் நாட்டு வைத்தியம் படிப்பதற்கு மகிழ்ச்சியும் குதூகலத்தையும் ஆர்வத்தையும் தூண்டும் வகையில் எழுதப்பட்டிருக்கிறது

இந்த நூலில் கரு உற்பத்தி எப்படி ஆகிறது? கரு வளர்ச்சியில் பஞ்சபூதம் எவ்வாறு வேலை செய்கிறது. தசவாயுக்கள் நமது தேகத்தை எவ்வாறு காத்து செயல்படுகிறது தசநாடியின் தொழில் என்ன திரிதோஷத்தின் தன்மை என்ன? கைநாடி பார்க்கும் விதம், மனித உடலில் 96 தத்துவக் கருவிகள் எவ்வாறு வேலை செய்கிறது. மற்றும் இருதயம், கல்லீரல், மண்ணீரல், தீனிப்பை மூத்திரப்பை முதலியவற்றின் தொழில் விவரங்களும் இதில் காணும் நோய்களின் விவரங்களும் அந்நோய்களுக்கான சிகிச்சை முறைகளும் மற்றும் சூரணம், மாத்திரை, செந்தூரம், பற்பம், சுண்ணம் லேகியம், தைலம் முதலிய அநேக முறைகள் இதனில் உள்ளது.

இதன் விலை ரூ. 5.

சண்முகானந்த புத்தகசாலை, பார்க்டவுன், சென்னை-3

# கலியாணப் பாட்டு



இட்டா

பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்

189, தங்கசாலை தெருவு, சென்னை.

இதன் விலை] 1950 [அணா 1

ஸ்ரீ செந்திலாண்டவன் துணை.

# கலியாணப் பாட்டு.

விநாயகர் துதி வெண்பா.

அன்புமிகு கல்யாண மற்புதமாய் காண்மிகுக்க
இன்புபெரு வாழ்த்துசெல இவ்வவையில்—பண்புடனே
செஞ்சடைநற் சேகரனின் சீர்புதல்வ ராமைமுக
ஐங்கரனை நெஞ்சத்தி லாழ்ந்து.

மாப்பிள்ளையை மச்சினிமார் இகழ்தல்.

முடுகு

ஏலேலோ ஏலிலேலோ சர்வமகிழ் சபைநல்திகழ்
ஏலிலேலோ ஏலேலோ

ஓடம்,

1 அத்தானே அத்தானே வாரும்
அழகுரும்சிங்காரத் திருமுகசீரும்
முத்தான என்மொழி சொல்வதைக்கேளும்
மூஞ்சியதில் துணைகொண்டு முக்காடுபோடும்
எத்தாகபெணணையே கட்டினீர்நீரும்
எங்கள்குலரெத்தினம் இவள்முகம்பாரும்
நந்தாஎண்ணியே நண்ணியேகேரும்
நாயகிதெய்வமென நன்மனங்கூரும்
கத்தாழைநாற்றமுடல் உண்மையேதாரும்
கடைகட்டமூளியென கண்டவர்சொல்மீரும் ஏ

2 ஆடுகள்மேய்த்துமே அலைந்ததும்பே ாச்சு
அதிகாரம்சால்வதை செய்திடவுமாச்சு
மாடுகள்மடக்கியே திரிந்ததும்போச்சு
மாக்ஷியாய்சபைதனி் உட்காரலாச்சு

காடுகளைச்சுற்றியே களைத்ததும்போச்சு
காலுக்குபாபாசு பூட்சுகளுமாச்சு
நாடுகள்திரிந்துமே அலைந்ததும்போச்சு
நலமாகடவுள் தனில் வந்ிடவுமாச்சு
பாடுகள்பட்டுமே பிழைத்ததும்போச்சு
பாங்கானஉத்தியோகம் செய்திடவுமாச்சு ஏ
சிலைப்பேன்பற்றியே அறிந்ததும்போச்சு

3 தினந்தினம்வெந்நீர் முழுகிடவுமாச்சு
தாளைக்குநேர்எலி பிடித்ததும்போச்சு
தானென்றுதெரியாது மமதைவுண்டாச்சு
ஆலைக்குள்செல்வாரி அவித்ததும்போச்சு
அழகுற்றஜோராய் அடைந்திடவுமாச்சு
கூழைக்குடித்துபசி தீர்ந்ததும்போச்சு
குண்டுசிறுமணிசாதம் உண்டிடவுமாச்சு
ஊளைப்புளிச்சநீர் உண்டதும்போச்சு
உடனுடன்பால்காப்பி சாப்பிடவுமாச்சு ஏ

4 ஆத்துக்குவரவென்ன காத்தைப்பரிப்பார்
அஞ்சாதுபங்கியும் கெஞ்சாவடிப்பார்
பார்த்துக்கொள்சாராயம் கள்ளுங்குடிப்பார்
பார்த்திட்டவிடமெல்லாம் இவரேயிருப்பார்
கூத்துக்குமத்தளம் கொட்டியேநிற்பார்
கூத்தாடிபெண்ணுக்குத் துணையாயிருப்பார்
சோத்துக்குமுன்னாலே தானேநடப்பார்
சொன்னசொல்ஆத்திலேஎழுதியேவைப்பார்
சாத்துக்குசாணுத்தி பின்னேயிருப்பார்
சங்கையறதாசிகடை வாசல்படுப்பார் ஏ

5 சாக்கணிந்தமேனிமேல் சட்டையுண்டாச்சு
கல்லாவடுத்திடவே மினுக்கிடவுமாச்சு
போக்கத்தஅத்தான் புகழ்பெறவுமாச்சு
போக்கிரியென்றபேர் க்ஷணம்மாறிப்போச்சு

காக்கைக்குமேல்நிறம் கருமேகம்போச்சு
ஆக்கைமுடைந்ததும் அப்பாலேபோச்சு
அருங்கிளிபெண்வர அமுல்பெறவுமாச்சு
மூக்கைமுணங்கியே பேசியதும்போச்சு
முத்துப்போலத்தான் நிறமாரலாச்சு ஏ

## மாப்பிள்ளை வீட்டார்கள் பெண்ணை இகழுதல்

1 புண்ணுடைபோல்தலை பறந்ததும்போச்சு
பதம்பெறஅண்ணிக்கு வாழ்வுவரலாச்சு
புண்ணுக்குநின்னதோர் அன்னும்போச்சு
புருஷனைக்கண்டதும் பூரிக்கலாச்சு
கண்ணுலேகாணுத நகைப்பூணலாச்சு
காலுக்குத்தண்டையும் சொலுசுமிகவாச்சு
உண்ணுதலையுண்டு உல்லாசமாச்சு
ஒஸ்தியாம்அம்பர்புனுகு பூசிடவுமாச்சு
மண்ணுலேபணிசெய்து பூண்டதும்போச்சு
மணவாளன்வந்ததும் மகிமையுறவாச்சு ஏ

2 கண்டாங்கிகட்டிய கலிகாலம்போச்சு
கனம்பெறபட்டுகள் உடுத்திடவுமாச்சு
திண்டாடிசோத்துக் கலைந்ததும்போச்சு
சீனிசெய்கோவா புசித்திடவுமாச்சு
அங்காடிதூக்கியே அலைந்ததும்போச்சு
அண்ணிக்குயிப்போ வாழ்வுவரலாச்சு
சிங்காரவெல்வெட்டு ரவிக்கைமேலாச்சு
சீமைநூல்தாவணி போட்டிடவுமாச்சு
மங்காதுதேசஸ் முகத்திலுண்டாச்சு
மணவாளன்மையலே கண்மூடிப்போச்சு ஏ

3 வலியமொல்குத்தியே திரிந்ததும்போச்சு
வன்மைபெறவூர்வழிபோல் தேகமேலாச்சு
புளிபெலைசாகுகூட்டி திரிந்ததும்போச்சு
புழுக்கச்சியென்றதோர் பேர்மாறிப்போச்சு

சளிசிந்துமூக்கினில் நத்துபுலாக்காச்சு
சமமாகமணவறைமே லேறிடவுமாச்சு
களிநின்றுபிழைத்திட்ட காலமேபோச்சு
கணவனார்வந்ததும் கனைசிரிப்பாச்சு
வெளிவந்துசக்திதியில் சிரித்ததும்போச்சு
வேணபுகழண்ணனால் அண்ணிக்குண்டாச்சு ஏ
4 மூந்தாணியிட்டதியில் செய்ததும்பாவம்
மூன்றுநாள்பட்டினி கிடந்ததுபாவம்
சந்தையில்கிழங்குபயர் விற்றதுபாவம்
சண்டையில்கொண்டை அறுபட்டதுபாவம்
கந்தையுமில்லா திருந்ததும்பாவம்
காட்டினில்சிப்பிக ளொடித்ததும்பாவம்
மண்டையினில்மயிற்றுப் போனதும்பாவம்
அண்டையில்அண்ணன்வர விட்டுதேசாபம்
அண்ணிக்குயிப்பெரிய வாழ்வுநல்யோகம் ஏ
5 ஊருக்குள்அண்ணிதான் காட்டேரிபோல
உவமானம்சொல்லவே முடியாதினை
பேருக்குப்பெண்ணென்று சொல்லுவார்மீள
பெருவயர்வண்ணானின் சால்போலசால
ஆருக்குந்தெரியாது அவள்திறம்காண
அனியாயமாகவே அகப்பட்டோம்நாண
சீருக்குச்செல்வனை கொடுத்தோமேபூண
சிங்காரமாப்பிள்ளை அங்கமேகோண
மாருக்குகந்தவள் இவளல்லதோண
மகாராசிதானிவள் இனிமேலேவேண ஏ

சம்மந்தியை இகழ்தல்

1 சம்மந்திமனைதனில் சகலமும்மூளி
சட்டுவம்பானையும் சகலமும்மூளி
அம்மியுங்குந்தாணி கலவடைமூளி
அரிசிஅரைக்கின்ற கொடைக்கல்லுமூளி

செம்பைஇருகாது — முற்றிலும்மூளி
சில்லரைபண்டங்கள் — யாவையும்மூளி
நன்மையும்தின்மையும் — கலம்பெறமூளி
காயகர்கிழவனின் — இருசெவிமூளி
உண்மையாயிவள்மகள் — உடல்முற்றும்மூளி
ஊர்முற்றுமிவள்பெயர் — வடபத்திரகாளி ஏ

2 செட்டிகடைதனில் — அட்டிகைத்திருடி
சேவகரைக்கொண்டு — ஜெயில்தனிலடைத்து
கட்டிப்படதெப்பல் — நன்றாய்கொடுத்து
நாடறியசம்மந்தி — மானம்விடுத்து
அட்டிபடஎங்கள் — அண்ணனையடுத்து
அவர்கால்பிடித்திட — பவுனாய்கொடுத்து
கட்டிக்கதேஸ்தனை — கஷ்டமெடுத்து
தற்காத்தபுண்ணியற்குத் — தானேமகிழ்ந்து
கட்டிக்கமகள்தனை — காலில்விழுந்து
கனமாயைசெய்தசிமின் — மருந்திடுங்கள்ளி ஏ

## மாப்பிள்ளை வீட்டார்கள் மணவாளனுக் குகந்தபெண் அல்லவென்று விசனமுறல்.

### என்னடி நான்பெற்ற மங்கை என்ற மெட்டு

இரத்தினமுத்தொளிதேகன் அதியோகன்சுபபோகன் ரதி
நேரிழைக்கொப்பிய — பாகன் — இவர்
நெறிசெப்பிடஞரிவொப்பிட — சரிகப்பிடதுரிமெப்பிட
நேர்மையரிச்சந்திரன் — சீலன் — சத்ய
பாமைமாணவன்சோ — பாலன் 1

ஆண்சிங்கவல்லபராஜனபிபோஜன்ஒளிதேஜன்மங்கை — அன்புக்குரிய
நல்ல — நேசன் — அண்ணி
அன்னான் தவமுனைனோர் மகிழ்நன்னார் பெறகின்னளிது
ஆண்மை மகிழ்பெற — கொண்டாள் — எங்கள்
அங்கஜனையுங்கை — யுண்டாள் 2

கூடைமுறக்கட்டுங்குரத்தி கரும்கிரத்திரைடபாத்தி
இணைகொள்ளுமிவள்ஜாதி மாத்தி பக்கம்
குணமாகிடகணமேகிட இனமாயிவள் மணமாகினள்
கூசநேமாப்பிள்ளைக் கிணையோ நாங்கள்
கொஞ்சக் தவரிலேனும் சிணையோ 3

ஊர்வசிபோல்மங்கையிருக்க ஜனம்பெருக்கமனம்சிருக்க இங்கு
ஊளையில்லைவிட்டோம் குருக்க இனி
உதகாதினி மறுதாரமே பதமாய்கொள இதமாகிறோம்
உண்மையதாயிவன் புளுத்கை செய்ய
ஒப்புரப்பார்க்கிறோம் தளுக்கை 4

## பெண்வீட்டார் பெண்ணுக்குகந்த மாப்பிள்ளையல்ல வென்று இகழ்ந்து விசனித்தல்.

ஆறுமுகவடி வேலவனே என்ற வர்ணமெட்டு

1 வெட்டியானென்றறி யாது தவரியே
வீண்மதி கொண்டனமே எங்கள்
கட்டிக்கரும்பெனும் கண்மணிசீதையை
காட்டினில் விட்டனமே

2 கூடைமன் தூக்கும் சடலத்தைமாற்றியே
கோட்டுடன்டர்பனிட்டு வர
ஜாடையறியாது சித்தம்மயங்கியே
சார்ந்ததே புத்திகெட்டு

3 பைங்கிளிலட்சுமிக் கிந்தவிதியுற
பாமனெழுதியதோ நாங்கள்
மங்கிமடிந்திட சொங்குசோரிகொண்ட
மாப்பிள்ளைக் கொப்பியதோ

4 பூவைகுத்தும் குற
பூவையைத்தானமிட்டோம்
யானைமேலேரியே
யாரையும் தட்டிவிட்டோம்
சேனைக்குமாரனெனும்
வீதி
ஆயிரம்பேர்வர

5 கோடிதவம்புரி
கொம்பனையாள் கிடைத்தாள்
நாடிதினம்பூசை
நலம் சொல்லும் நன் மொழிபோல்
நீடிவாங்கொள
நீங்கள்
தேடிப்புரிகுவீர்

6 தாசன் சபாபதி
தகைபெரு மாப்பிள்ளையே
நசனறிய
இனிசுக முன் கிளையே
சொல்மொழிகேளும்
நீரும்
இவளை வைத்தாளும்

## வாழிவிருத்தம்

ஆழிசூழ் உலகில்பக்த அரும்புகழ்தொண்டர்வாழி
அன்புபெற பெண்டுபிள்ளை அவனிவாழி

வாழிமிக மயில்வாகனன் பிரசம்வாழி
வாழி எஸ். டி. மாணிக்கம் மென்மேல் வாழி

கோழிக்கொடி சேவலுடன் குமரன் வாழி
கோதைவள்ளி தெய்வானை மாதம்வாழி

காழிநகர் சம்பந்தர் அருள்சொல்வாழி
காண்மிகுக்க சபாபதியும் வாழிவாழி.

கலியாணப்பாட்டு முற்றிற்று.

# விநாயக புராண வசனம்

ஆனை முகத்தனை அன்புடன் பணிபவர்
ஏனை நிலத்தினை எய்துவர் திணமே

என்பதுகொண்டு கற்பகக் களிற்றை எவரும் எக்காலத்தும் வழிபடத்தக்கதாம். தன்னை வழிபட்டார் மனம் மகிழுற வெக்காரியங்களையுமினிது நிறைவேற்றுங்கருணை வாழ்ந்த வள்ளற்பெருமான் விநாயகரே யாதலின், அவரது தோற்றப் பிரபாவங்களையும், அவர் அன்பர்மாட் டன்புகூர்ந்தருளியத் திருவிளையாடல்களையும், அவரை யுபாசித்துப் பேறு பெற்றோர் பெருமைகளையும், பிராணவப்பொருளாம் ஐங்கரக்கடவுளைத் துதித்தவற்குரிய சோடசம் அட்டோத்திரம் முதலான நாமங்களையும் மிகத் தெளிவாகவும், விரிவாகவும் கூறுமிந்நூலைப் போல் வெறெந்நூலுமில்லை. எனலாம். மேலும் 'இந்நூலொன்றினைப் படித்தார் பன்னூலின்பயனை நன்குணர்ந்தார்' என்று கொள்ளத்தக்க 'சகலகலா பொக்கிஷம்' என்பதும் இந்நூலுக்கே பொருந்தும் ஆகவே, இந்நூலை ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்கும் பொருட்டு உயர்ந்த கடிதத்தில் ஐதீகப்படங்களுடன் அச்சிட்டு அழகாய் பைண்டு செய்யப்பெற்றிருக்கிறது ... விலை ரூபா **8-0-0**

---

இட்டா-பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்
189, தங்கசாலை தெருவு, சென்னை.

# விநாயக புராண வசனம்

ஆனை முகத்தனை அன்புடன் பணிபவர்
ஏனை நிலத்தினை எய்துவர் திணமே ..

என்பதுகொண்டு கற்பகக் களிற்றை எவரும் எக்காலத்தும் வழிபடத்தக்கதாம். தன்னை வழிபட்டார் மனம் மகிழுற வெக்காரியங்களையுமினிது நிறைவேற்றுங்கருணை வாழ்ந்த வள்ளற்பெருமான் விநாயகரே யாதலின், அவரது தோற்றப் பிரபாவங்களையும், அவர் அன்பர்மாட் டன்புகூர்ந்தருளியத் திருவிளையாடல்களையும், அவரை யுபாசித்துப் பேறு பெற்றார் பெருமைகளையும், பிராணவப்பொருளாம் ஐங்கரக்கடவுளைத் துதித்தவற்குரிய சோடசம் அட்டோத்திரம் முதலான நாமங்களையும் மிகத் தெளிவாகவும், விரிவாகவும் கூறுமிந்நூலைப் போல வெறெந்நூலுமில்லை என்லாம். மேலும், 'இந்நூலொன்றினைப் படித்தார் பன்னூலின்பயனை நன்குணர்ந்தார்' என்று கொள்ளத்தக்க 'சகலகலா பொக்கிஷம்' என்பதும் இந்நூலுக்கே பொருந்தும். ஆகவே, இந்நூலை ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்கும் பொருட்டு உயர்ந்த கடிதத்தில் ஐதிகப்படங்களுடன் அச்சிட்டு அழகாய் பைண்டு செய்யப்பெற்றிருக்கிறது ... விலை ரூபா 8-0-0

---

இட்டா-பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்
189, தங்கசாலை தெரு, சென்னை.